**தினமலர் (01.06.2021)**





புகளூர் காகிதஆலை திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள கரோனா சிகிச்சை மையத்தை சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். (அடுத்த படம்) இதையொட்டி புகளூர் சிகிச்சை மையத்தில் பங்கேற்ற மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, எம்பி ஜோதிமணி, எம்எல்ஏக்கள் மாணிக்கம், சிவகாமசுந்தரி, இளங்கோ, கலெக்டர் பிரசாந்த் மு வடநேரே.

# புகளூரில் கரோனா சிகிச்சை மையம்: முதல்வர் திறந்து வைத்தார்

**கரூர், ஜூன் 1-**

புகளூர் டிஎன்பிஎல் ஆலை திருமண மண்டபத்தில் அமைத்துள்ள ஆக்சிஜன் வசதிகள் கொண்ட கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தினை தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலமாக நேற்று திறந்து வைத்தார்.

200 படுக்கைகளுடன் கூடிய இந்த கரோனா சிகிச்சை மையத்தில் 152 படுக்கை வசதிகள் ஆக்சிஜன் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆக்சிஜன் தட்டுப்பாடின்றி மருத்துவமனைக்கு கிடைத்திட ரூ.1 கோடியில் தேவையான உபகரணங்கள் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இங்கு உற்பத்தியாகும் ஆக்சிஜன் இந்த சிறப்பு மருத்துவமனைக்கு நேரடியாகவும், மேலும் கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கும் தேவையான ஆக்சிஜனை சிலிண்டர்களில் இங்கு நிரப்பி வழங்கிட உள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த இந்த நிகழ்ச்சியில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, எம்பி ஜோதிமணி, கலெக்டர் பிரசாந்த் மு வடநேரே, எஸ்பி சசாங்சாய், எம்எல்ஏக்கள் மாணிக்கம், இளங்கோ, சிவகாமசுந்தரி, டிஎன்பிஎல் செயல்இயக்குனர் கிருஷ்ணன், மாவட்ட திட்ட இயக்குனர் பாலகணேஷ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு மருத்துவ சிகிச்சை வழங்கிட 6 டாக்டர்கள், ஒரு செவிலிய கண்காணிப்பாளர், 10 செவிலியர்கள், 4 சுகாதாரப்பணியாளர்கள், 4 துாய்மை பணியாளர்கள், 1 மருந்தாளுனர், மற்றும் 3 தரவு உள்ளீட்டாளர்கள் சுழற்சிமுறையில் பணியாற்றும் வகையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு அனுமதிக்கப்படும் நோயாளிகள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டீன் மற்றும் சுகாதாரத்துறை இணை இயக்குனர் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவர்களால் முதலில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவர்களின் பரிந்துரையின்படி மட்டும் இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவார்கள். எந்த ஒரு நோயாளியும் நேரடியாக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்த மையத்தில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு டிஎன்பிஎல் ஆலையில் இருந்து ஆக்சிஜன் தங்கு தடையின்றி வழங்கப்படுகிறது. கூடுதலாக 7ஆயிரம் லிட்டர் ஆக்சிஜன் கொள்ளளவுள்ள 30 உருளைகள் தயார் நிலையில் பயன்பாட்டிற்கு உள்ளது. நோயாளிகளின் பயன்பாட்டிற்காக மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், சக்கர நாற்காலிகள், இதர உபகரணங்கள் யாவும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நோயாளிகளுக்கு 3 வேளையும் நோயின் தன்மைக்கு ஏற்ப உணவு வழங்கப்படுகிறது. 24 மணி நேரமும் தங்கு தடையில்லா மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஜெனரேட்டர் வசதியும், குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்படுபவர்களுக்கு சித்த மருத்துவர்களால் யோகா மூச்சுப்பயிற்சி வழங்கப்படும். நோயாளிகளுக்கு உயர்சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் அவர்கள் உடன் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்ல 108 ஆம்புலன்ஸ்கள் 4 பயன்பாட்டிற்கு தயாராக வைக்கப்பட்டுள்ளது.

**தினகரன் (01.06.2021)**

கரூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இணைந்து

# ஆக்சிஜன் வசதி கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையம்



கரூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இணைந்து டிஎன்பிஎல் டவுன்ஷிப் சமுதாயக்கூடத்தில் அமைத்துள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தலைமை செயலகத்தில் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அருகில், தலைமை செயலாளர் இறையன்பு, செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் ராஜீவ் ரஞ்சன், தொழில்துறை சிறப்பு செயலாளர் அருண் ராய்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜூன் 1: கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இணைந்து அமைத்துள்ள ஆக்சிஜன் வசதிகள் கொண்ட கொரோனா சிறப்புசிகிச்சைமையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வீடியோ கான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூரில் உள்ள டிஎன்பிஎல் டவுன்சிப்-ல் உள்ள சமுதாய கூடத்தில், 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையத்தை அமைத்துள்ளது. அவற்றில் 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதிகள் கொண்டவை.

இந்த சிகிச்சை மையத்திற்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவ பணியாளர்களுக்கான அறைகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, ஆக்சிஜன் தட்டுப்பாடின்றி மருத்துவமனைக்கு கிடைத்திட, சுமார் ரூ.1 கோடி செலவில், தேவையான உபகரணங்கள் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், அருகில் உள்ள கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கும் தேவையான ஆக்சிஜனை சிலிண்டர்களில் இங்கு நிரப்பி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், கரூரில் இருந்து மின்சார துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ, இரா. மாணிக்கம், சிவகாம சுந்தரி, கரூர் மாவட்ட ஆட்சி தலைவர் பிரசாந்த் வடநேரே, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன் ஆகியோரும், தலைமை செயலகத்தில் இருந்து தலைமை செயலாளர் இறையன்பு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், தொழில் துறை சிறப்பு செயலரளர் அருண் ராய் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை (01.06.2021)

### 152 ஆக்சிஜன் படுக்கைகளுடன் கூடிய 200 படுக்கை வசதியுடன்

# டிஎன்பிஎல் வளாகத்தில் கரோனா சிகிச்சை மையம்

## ● கரூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

■ சென்னை/கரூர்

கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில் 152 ஆக்சிஜன் வசதி படுக்கைகள் உட்பட 200 படுக்கைகள் கொண்ட கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

கரூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) டவுன்ஷிப்பில் உள்ள சமுதாயக் கூடத்தில் மாவட்ட நிர்வாகம், டிஎன்பிஎல் மற்றும் தன்னார்வலர்கள் பங்களிப்புடன் 200 படுக்கைகளுடன் கூடிய கரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு உள்ளது. அவற்றில் 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதி கொண்டவை.

இந்த சிகிச்சை மையத்துக்கு தேவையான மின்சாரம், குடிநீர் வசதிகள், மருத்துவப் பணியாளர்களுக்கான அறைகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, ஆக்சிஜன் தட்டுப்பாடு இல்லாமல் இந்த மருத்துவமனைக்கு கிடைக்கும் வகையில், ரூ.1 கோடியில் தேவையான உபகரணங்கள் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.




▲ கரூர் மாவட்டம் புகழூர் டிஎன்பிஎல் நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை சென்னையில் இருந்து காணொலி வாயிலாக திறந்து வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தலைமைச் செயலர் வெ.இறையன்பு, டிஎன்பிஎல் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், தொழில்துறை சிறப்புச் செயலர் அருண் ராய் ஆகியோர்.

மேலும், அருகில் உள்ள கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கும் தேவையான ஆக்சிஜனை சிலிண்டரில் இங்கு நிரப்பி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இந்த கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலியில் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் கரூர் டிஎன்பிஎல் நிறுவனத்தில் இருந்து அமைச்சர் செந்தில்பாலாஜி, எம்பி ஜோதிமணி, டிஎன்பிஎல் செயல் இயக்குநர் எஸ்விஆர்.கிருஷ்ணன், எஸ்பி சசாங்சாய், எம்எல்ஏக்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, சிவகாமசுந்தரி உள்ளிட்டோரும், தலைமைச் செயலகத்தில் இருந்து தலைமைச் செயலர் வெ.இறையன்பு, டிஎன்பிஎல் நிறுவனதலைவர் ராஜீவ் ரஞ்சன், தொழில் துறை சிறப்புச் செயலர் அருண்ராய் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இம்மையத்தில், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பரிந்துரைப்படி மட்டுமே கரோனா தொற்றாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். நேரடியாக உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். உயர் சிகிச்சை தேவைப்படும் நிலையில் உடனடியாக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு 4 ஆம்புலன்ஸ் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தினத்தந்தி (01.06.2021)



கரூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய கூடத்தில் ஆக்சிஜன் வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார். அருகில் தலைமைச் செயலாளர் இறையன்பு உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர்.

### 200 படுக்கைகளுடன்

# கரூரில் ஆக்சிஜன் வசதி கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையம்

## காணொலி காட்சி மூலம் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜூன்.1-

கரூரில் புதிதாக ஆக்சிஜன் வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலமாக நேற்று திறந்து வைத்தார்.

**200 படுக்கைகள்**

கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் டவுண்ஷிப்பில் உள்ள சமுதாயக் கூடத்தில் 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு உள்ளது. அதில் 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதிகள் கொண்டவையாகும். இந்த சிகிச்சை மையத்திற்குத் தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவப் பணியாளர்களுக்கான அறைகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, ஆக்சிஜன் தட்டுப்பாடின்றி கிடைக்கசுமார் ரூ.1 கோடி செலவில், தேவையான உபகரணங்கள் இத்தாலி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அருகிலுள்ள கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் தேவையான ஆக்சிஜனை சிலிண்டர்களில் இங்கு நிரப்பி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்**


இந்த மையத்தை சென்னையில் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலமாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், கரூரிலிருந்து மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, ஜோதிமணி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் இளங்கோ, மாணிக்கம், சிவகாம சுந்தரி, கரூர் மாவட்ட கலெக்டர் பிரசாந்த் மு.வடநேரே, கரூர் அரசு மருத்துவக்கல்லூரி டீன் முத்துக்கிருஷ்ணன், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் எஸ்.வி.ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் இறையன்பு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராஜீவ் ரஞ்சன், தொழில் துறை சிறப்புச் செயலாளர் அருண் ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தினமணி (01.06.2021)

# கரூர் காகித ஆலை கரோனா சிகிச்சை மையம்

## முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



கரூர் மாவட்டம் டி.என்.பி.எல். சமுதாயக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வழியாக திங்கள்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, காகித ஆலை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், தொழில்துறை சிறப்பு செயலாளர் அருண் ராய். (வலது ) விழாவில் பங்கேற்ற அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, மக்களவை உறுப்பினர் எஸ். ஜோதிமணி உள்ளிட்டோர்.

**சென்னை, மே 31:** கரூர் காகித ஆலை நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்து வைத்தார். அவர் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் திறந்து வைத்துள்ள இந்த மையத்தில் சிகிச்சைக்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கரூர் டிஎன்பிஎல் சமுதாயக் கூடத்தில் 200 படுக்கைகளுடன் அமையப் பெற்ற சிகிச்சை மையத்தில், 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதியைக் கொண்டிருக்கின்றன.

ஆக்சிஜன் தட்டுப்பாடின்றிக் கிடைத்திட சுமார் ரூ.1 கோடி செலவில் தேவையான உபகரணங்கள் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கும் தேவையான ஆக்சிஜனை சிலிண்டர்களில் இங்கு நிரப்பி அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிகிச்சை மையத் திறப்பு நிகழ்வில், கரூரில் இருந்து அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மக்களவை உறுப்பினர் எஸ்.ஜோதிமணி, சட்டப் பேரவை உறுப்பினர்கள், கரூர் ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே உள்ளிட்டோரும், தலைமைச் செயலகத்தில் இருந்து தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, செய்தித் தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், தொழில் துறை சிறப்புச் செயலாளர் அருண் ராய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காலைக்கதிர் (01.06.2021)

# டி.என்.பி.எல்., சிகிச்சை மையம் காணொலியில் முதல்வர் திறப்பு

கரூர், ஜூன் 1–

கரூர் மாவட்டம் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு சொந்தமான சமுதாய கூடத்தில் ஆக்சிஜன் வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை, காணொலி காட்சி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இங்கு, 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில், 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதிகள் கொண்டவை.

இந்த சிகிச்சை மையத்திற்குத் தேவையான மின்சாரம், குடிநீர், மருத்துவப் பணியாளர்களுக்கான அறைகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, ஆக்சிஜன் தட்டுப்பாடின்றி இம்மருத்துவமனைக்குக் கிடைத்திட, ஒரு கோடி ரூபாய் செலவில், தேவையான



■ கரூர் டிஎன்.பி.எல். சமுதாயக்கூட கொரோனா சிகிச்சை மையத்தை, முதல்வர் ஸ்டாலின் காணொளிக்காட்சி மூலம் திறந்து வைத்தார். மையத்தை, அமைச்சர் செந்தில் பாலாஜி பார்வையிட்டார். அருகில் கலெக்டர் பிரசாந்த் வடநேரே, எஸ்.பி.சசாங்சாய்.

உபகரணங்கள் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு தேவையான ஆக்சிஜனை சிலிண்டர்களில் இங்கு நிரப்பி வழங்கவும் எற்பாடு செய்யப்பட்டுள்ளது,

மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, எம்.பி., ஜோதிமணி, கலெக்டர் பிரசாந்த் வடநேரே, எம்.எல்.ஏ.,க்கள் இளங்கோ, மாணிக்கம், சிவகாமசுந்தரி, செயல் இயக்குனர் கிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**The Indian Express (01.06.2021)**


# CM inaugurates special CCC at TNPL, Karur

**EXPRESS NEWS SERVICE**
@ Karur/Chennai

CHIEF MINISTER MK Stalin inaugurated a special Covid Care Centre on the Tamil Nadu Newsprint and Papers Limited campus in Karur, via videoconferencing on Monday. The 200-bed facility was set up by the district administration and the TNPL management. Of the 200 beds, 152 are equipped with oxygen support.

Medical oxygen will be manufactured at the TNPL factory and supplied to the facility through pipelines, and to provide uninterrupted oxygen supply, equipment worth ₹1 crore has been bought from Italy. Besides this, arrangements have been made to fill oxygen in cylinders on the TNPL premises, and send them to hospitals in Karur and nearby districts such as Namakkal, Salem and Erode. A total of 30 cylinders, with 7,000 litres of oxygen, have been kept ready for the patients in case of an emergency.

Minister for Electricity, Prohibition and Excise V Senthil Balaji, along with Karur MP Jothimani and MLAs Ilango (Aravakurichi), Manickam (Kulithalai), Sivagamasundari (Krishnarayapuram) and TNPL executive director SVR Krishnan, led by Karur district Collector Prashant M Vadanere inspected the CCC after it was inaugurated.



Chief Minister MK Stalin alongside State Chief Secretary Iraianbu and TNPL President & MD Rajiv Ranjan inaugurating the special CCC set up at TNPL through video conferencing on Monday | ARAVIND RAJ

A total of six doctors, one nurse supervisor, 10 nurses, four health workers, four sanitary labourers, one pharmacist and three data entrants have been employed on a rotation basis at the special CCC on the TNPL campus, where food and accommodation have been arranged for them.

Patients admitted at the facility will first be examined by doctors under the Karur GMCH dean and joint director of the Public Health Department. Covid-19 patients will be admitted at the CCC only based on their recommendations. All patients admitted at the facility will be given three meals a day.